2016 பிப்ரவரி 17]

50—

புதிய சேமிப்புக் கிடங்கு

***51481—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், பண்ணப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள பண்ணப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1982 ஆம் ஆண்டு கட்டப்பட்டு அது தற்போது பழுதடைந்த நிலையில், இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2014—2015 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு கட்ட ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மையின் பிறப்பிடமாய், வாய்மையின் இருப்பிடமாய், அன்பின் உறைவிடமாய், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாய், ஏழரை கோடி தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு, பாசம், பரிவு, நேர்மை, ஆளுமைத் திறன், மக்களைக் காத்திடும் மனிதநேயம், எதற்கும் அஞ்சாத துணிவு, தியாகத்தின் திருவுருவமாய் விளங்கிவரும், இவை அனைத்தும் ஒருங்கிணைந்த*

ஒரே சொல் 'அம்மா'. வருகின்ற 2016–லும் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக அரியணையில் அமர இருக்கும் மாட்சிமைபொருந்திய புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

முற்பகல் 10–25

கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே வரம் தரும் அன்னையாய், இந்த அவையில் வினா வரும் முன்பே என்னுடைய புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், பண்ணைப்பட்டு ஊராட்சியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிய தானிய சேமிப்புக் கிடங்குக் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் உள்ள 30 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 20 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குத் தானிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டித் தந்தமைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

மேலும், புதிய கட்டமைப்புகளை உருவாக்கித் தருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், அந்த 8 தானிய சேமிப்புக் கிடங்குகளையும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த கூட்டுறவுத் துறையில் பல பொற்கால சாதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

குறிப்பாக, பல ஆண்டுகளாக நடத்த முடியாத கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த கூட்டுறவு தேர்தல் ஆணையம் அமைத்து, 23,661 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தி, 2 இலட்சத்து

2016 பிப்ரவரி 17]

36 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிருவாகக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்ததும், 50 இலட்சம் விவசாயிகளுக்கு 22,487 கோடி ரூபாய் வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனை.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாநில, மாவட்ட மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் என அனைத்தையும் நவீனமயமாக்கி, கணினிமயமாக்கி தனியார் வங்கிகளுக்கு இணையாகச் செயல்படுத்தியிருக்கிறார்கள். கடந்த ஆட்சியில் தமிழகக் கூட்டுறவு நிறுவனங்களில் வைப்புத் தொகை 26,247 கோடி ரூபாய் இருந்தது. இன்றைக்கு தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அதனை கடந்த 31–12–2015 அன்று நிலவரப்படி 49,185 கோடி ரூபாயாக உயர்த்திக் காட்டியுள்ளார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்த கடலூர் மாவட்டத்திற்கு 128 கிடங்குகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே ஏறத்தாழ ரூ.489.62 கோடி மதிப்பீட்டில் 5 இலட்சத்து 10 ஆயிரத்து 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3,879 கிடங்குகளை இன்றைக்குக் கட்டிக் கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுறவுத் துறை வரலாற்றில் ஒரு புதிய சாதனையைப் படைத்திருக்கிறார்கள். இந்தியாவில் எந்த ஒரு முதலமைச்சரும் இவ்வளவு குறுகிய காலத்திலே இந்த அளவுக்கு விவசாயிகள் பயனடைகின்ற வகையில் கிடங்குகளை கட்டிக் கொடுத்ததாக வரலாறு இல்லை. அந்த வரலாற்று சாதனையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இன்றைக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ரூ.586.12 கோடி செலவில் 6,323 கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு பார்த்தீர்கள் என்றால், ஏறத்தாழ அனைத்து கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் முழுமையாகக் கிடங்குகள் கட்டிக் கொடுப்பதற்கு துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறி இருக்கிற அந்தச் சங்கங்களுக்கு சொந்த கிடங்குகள் கட்டுவதில் தாமதம் ஏற்படுகிறது. வருங்காலத்தில் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் மீண்டும் அமையப்போகிறது. இடங்கள் கிடைக்கும்பட்சத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே முழுமையாக அத்துணை சங்கங்களுக்கும் தானியக் கிடங்குகள் கட்டிக்

கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பது மக்களால் உறுதிசெய்யப்பட்டது. மீதமுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தானியக் கிடங்குகளைக் கட்டிக் கொடுப்பேன் என்று கூறியுள்ளார்கள். கீரப்பாளையம் ஒன்றியம், முகையூர் ஊராட்சியில் இயங்கிவரும் நியாய விலைக் கடை சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு புதியதாக கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற, முகையூர் நியாய விலைக் கடைக்குச் சொந்த இடம் இல்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது தனியாரிடமிருந்தோ அல்லது அந்தக் கிராமப் பொது மக்களின் பங்களிப்பின் மூலமாகவோ நிதி கிடைக்கும் பட்சத்தில் அங்கே புதிய நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*